**அறநாயக்க பிரதேச சபை**

**கேகாலை மாவட்டம்**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

-------------------------------

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 24 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 யூலை 22 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

---------------------

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அறநாயக்க பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

--------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான 13 மயான நிலங்களின் காணி, இரண்டு விளையாட்டு மைதானங்களின் காணி, தாய்சேய் இல்லம் அமைந்துள்ள காணி, பொது வசதிகளுடனான காணி, சந்தை நில கட்டிடம் மற்றும் வீடுகளுடனான 2 காணிப் பகுதிகள் என்பவற்றின் பெறுமதி கணிப்பிடப்பட்டு காணி மற்றும் கட்டிடத்தின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டிலிருந்து கொண்டுவரப்படுகின்ற களஞ்சிய இருப்புக் கணக்கில் ரூபா 103,993 தொகையான நிலுவைக்காக தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) நடைமுறை வேலைகளின் பெறுமதியான ரூபா 100,000 தொகையை கடன்கொடுத்தோரின் கீழ் ஒதுக்கீடு செய்யும் போது ரூபா 10,000 ஆக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) உஸ்ஸாப்பிட்டிய பொது நூலகத்தில் 33 புத்தகங்களும், அறநாயக்க பொது நூலகத்தில் 05 புத்தகங்களும் ஆக கூட்டுமொத்தமாகக 38 புத்தகங்களின் பெறுமதி விலையிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது வருமானங்களும் செலவினங்களும் உரிய பிரதான பேரேட்டில் கணக்கு பேணப்பட்டிருக்கவில்லை

(ஊ) சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட களஞ்சியப் பொருட்களை பதிவு செய்யும் போது களஞ்சியக் கட்டுப்பாட்டுக் கணக்கிலும் கடன்கொடுத்தோர் கணக்கிலும் மூலங்களைக் குறிப்பிடுவதற்குப் பதிலாக நேரடியாக செலவினத் தலைப்பில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் 04 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 10,677,214 ஆக இருந்ததுடன், அதற்குரிய உபயோகப் பதிவேடுகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 10,008,773 ஆனமையால் வேறுபாடு ரூபா 668,441 ஆகும்.

(ஆ) வருமானக் கணக்கு அறிக்கையினதும் பொழிப்பு வருமானப் பதிவேட்டினதும் பிரகாரம் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

### 1.3.3 தொங்கல் கணக்கு

---

12 வருடங்களாக முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 672,333 தொகையான தொங்கல் கணக்கில் செலவு மீதியை மீளாய்வாண்டின் போதும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 506,154 ஆக இருந்ததுடன் 01 வருடத்தை விஞ்சிய வேலைக் கடன்கொடுத்தோர் ரூபா 100,000 ஆகும்.

**1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

1999 மற்றும் 2000 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 45,683 கொடுப்பனவு செய்யப்பட்ட செயல்நிமித்த முற்பணங்களுக்குரிய 07 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத:தவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 127 ஆம் பிரிவு | மயான நிலங்கள் மற்றும் இடுகாடு கட்டளைச் சட்டத்தின் 03 ஆவது பிரிவின் செயற்பாடுகளுக்காக பிரதேச சபை எல்லையில் அந்த கட்டளைச் சட்டத்தின் உரிய அதிகாரசத்தரப்பினர் பிரதேச சபையாக இருந்த போதிலும் எறுால்பொல கிராமத்தில் அமைந்துள்ள மயான நிலத்தில் அதன் ஏற்பாடுகளுக்கு முரணாக ஹதபிம அதிகாரசபையின் கீழ் காணப்பட்டது. |
| (ஆ) 2006∴12 ஆம் இலக்க முத்திரை வரி (விஷேட ஏற்பாடு) அதிகாரச் சட்டத்தின் 3 ஆவது பிரிவு | வியாபாரமொன்று, வணிகமொன்று, தொழில் முயற்சி அல்லது தொழிலொன்று நடாத்திச் செல்வதற்காக விநியோகிக்கப்பட்ட |

| | | |
|---|---|---|
| | | அனுமதிப்பத்திரக் கட்டணத்தில் 10மூ அல்லது ரூபா 2,000 என்ற அதில் குறைந்த தொகை அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 24,681 முத்திரை வரியொன்று அதன் பிரகாரம் அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நி.பி 571 | இரண்டு வருடங்களை விஞ்சிய ரூபா 105,140 கூட்டுத்தொகையான 17 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | சப்ரகமுவ மாகாண சபையின் நிதி விதிக் கோவையின் 261.2.2 ஆம் விதி | 09 சந்தர்ப்பங்களின் போது உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 131,383 கூட்டுத்தொகையான முற்பணம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,537,109 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,686,135 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 6,149,026 வீழ்ச்சியொன்றைக் காண்பித்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகள் ரூபா 6,149,026 தொகை வீழ்ச்சியடைவதற்கு 05 வருமான விடயங்களில் குறைவும் 03 செலவின விடயங்களில் அதிகரிப்பும் பிரமானமாகத் தாக்கமளித்திருந்தன.

## 2.3 வருமான நிர்வாகம்

---

### 2.3.1 வருமாக சேகரித்தலின் செயலாற்றல்

---

தலைவரினால் மீளாய்வாண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமான மூலம் | 2014.01.01 இல் நிலுவை | 2014.12.31 இல் நிலுவையில் அறவீடு | 2014 ஆம் ஆண்டில் பற்றுச்சீட்டிடல் | ஆண்டின் பற்றுச்சீட்டிடல்களில் அறவீடு | 2014.12.31 இல் நிலுவை | | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 2014.01.01 இல் காணப்பட்டமீதி | ஆண்டின் பற்றுச்சீட்டிடல்களில் நிலுவை | |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | ஆதனவரியும் வரியும் | 872 | 349 | 1,718 | 1,238 | 523 | 480 | 1,003 |
| ii. | வாடகை | 418 | 117 | 1,598 | 1,577 | 301 | 21 | 322 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 19 | 19 | 545 | 487 | - | 58 | 58 |
| iv | ஏனைய வருமானம் | 6,110 | 5,544 | 12,600 | 1,640 | 566 | 10,960 | 11,526 |

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் ஆதனவரி மீதி ரூபா 949,923 ஆக இருந்த போதும் மேற்கூறப்பட்ட நிலுவை வருமான விபரங்களின் படி மீதி 1,003,000 ஆக இருந்தது.

### 2.3.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய பணம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 132,000 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 595,163 |
| | | 727,163 |

**2.3.4 இறைச்சிக்கடை வாடகை**

பொதுச் சந்தையில் 02 ஆம் இலக்க இறைச்சிக் கடைக்காக கேள்வி கோரி தெரிவு செய்யப்பட்ட வாடகையாளருடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடாமலும் மூன்று மாத வாடகைத் தொகைக்குச் சமமான பிணை வைப்பு பெறப்படாமலும் 2013 மற்றும் 2014 ஆம் அண்டுகளுக்காக வாடகைக்கு வழங்கப்பட்டமையால் இந்த வாடகையாளர் செலுத்தாதிருந்த ரூபா 92,887 தொகையை அறவிட முடியாதிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

சபைக்குச் சொந்தமான ஓடக்கூடிய தகுதியான நிலையில் 02 கெப் வண்டிகளும், 06 டிரெக்டர்களும், முற்சக்கர வண்டி ஒன்றும், வீதிச் செப்பனிடுகை ஒன்றும் மற்றும் குறுா ரக கெப் வண்டி ஒன்றும் இருந்த போதிலும் 05 சாரதிகள் மாத்திரம் சேவையில் ஈடுபட்டிருந்தமையினால் வாகனங்களின் எண்ணிக்கைக்கு போதியளவான சாரதிகளின் எண்ணிக்கை காணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நாளாந்த வீதிப் பராமரிப்பு நடவடிக்கைக்காக ஐந்து தொழிலாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் சேவையில் ஈடுபடுத்துகின்ற இடங்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்கு எதிராக மற்றும் பிரதேச சபையினால் தொடரப்பட்ட வழக்குகள் தொடர்பான பூரணமான தகவல்களை உள்ளடக்கிய வழக்குப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. சபையின் வழக்குகளுக்காக வாதாடுகின்ற வழக்கறிஞர்கள் வெளிப்படையாக தெரிவு செய்யப்படாதிருந்ததுடன் தலைவரின் பெயப்பட்டியலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) ஆர்.சீ - 1409 ஆம் இலக்க உழவு இயந்திரத்தின் சாரதியின் கவனமின்மையின் காரணமாக விபத்திற்குள்ளாகி இருந்தது. அதனைப் பழுது பார்ப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகை, காப்புறுதிக் கம்பனியில் இருந்து மீளளிப்புச்

செய்யப்பட்ட தொகை என்பவற்றிக்கிடையே வேறுபாடான ரூபா 35,000 தொகை சபைக்கு நட்டமாகியிருந்தது.

(ஈ) சட்டத்தரணியொருவருக்கு தேவையான தகவல்களை சரியாக வழங்காமையின் காரணமாக ஒரு வழக்கை கேட்டு விலங்கிக் கொள்வதாகவும் சபையின் உத்தியோகத்தர்களின் ஆர்வமொன்று காணப்படாதிருந்ததாகவும் நீதிமன்றத்தில் அறிவித்தலொன்று சட்டத்தரணி செய்தமையின் காரணமாக கட்டணத்தின் கீழ் மேலுமொரு நட்டமொன்று வலுவிழக்கச் செய்யப்பட்டமையின் காரணமாக சபைக்கு ரூபா 53,728 தொகையான நட்டமொன்றை ஏற்க வேண்டியிருந்தது.

(உ) சபைக்குச் சொந்தமான பழைய கிராம சபைக் கட்டிடத்தில் குடியிருப்பதற்காக நபரொருவருக்கு 2003 பெப்ரவரி 27 ஆந் திகதி குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அதனை ஆயுர்வேத நிலையமொன்றாக ஆரம்பிப்பதற்காக அந்தக் கட்டிடத்திலிருந்து அந்த வாடகையாளரை அகற்றுவதற்கு மாவனல்லை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது. அந்த வழக்கின் சீர்ப்பின் பிரகாரம் குடியிருப்பாளரின் வாய்மொழிமூல கோரிக்கையின் அடிப்படையில் அரசின் மதிப்பீட்டு வாடகையை எதிர்காலத்தில் செலுத்துவதற்கும் இந்த வழக்கிற்காக அரசாங்கத்திற்கு செய்வதற்கு ஏற்பட்ட வழக்குக் கட்டணத்தை செலுத்துவதற்கும் இணங்கி கேட்டு விலக்கிக் கொள்ளப்பட்டிருந்தது. வழக்கை கேட்டு விலக்கிக் கொள்ளப்பட்டதன் பின்னர் அரசாங்கத்தின் மதிப்பிட்டு வாடகைகளை ரூபா 5,000 தொகையான மாதாந்த வாடகை மற்றும் சபைக்கு செய்ய வேண்டி ஏற்பட்ட வழக்குக் கட்டணங்களிலிருந்து ரூபா 7,100 தொகையும் செலுத்தாமையின் அடிப்படையில் அத்தொகை சபைக்கு நட்டமாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. தாமதமான தண்டப் பணத்துடன் செலுத்தப்படாத மாதாந்த வாடகை 2014 ஆம் ஆண்டிற்காக மாத்திரம் ரூபா 99,000 ஆக இருந்தது.

## 3.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 625,000 பெறுமதியான 53-5638 ஆம் இலக்க கெப் வண்டி விபத்திற்குட்பட்டதன் பின்னர் 2009 ஆம் ஆண்டிலிருந்தும், ரூபா 346,877 பெறுமதியான 49-7099 ஆம் இலக்க உழவு இயந்திரமும், ரூபா 79,250 பெறுமதியான 67-0125 ஆம் இலக்க உழவு

இயந்திரமும் இதற்காக அனர்த்தங்களுக்கு உள்ளாகும் வகையில் உஸ்ஸாப்பிட்டிய உபஅலுவலக வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இயந்திரம் மற்றும் உபகரணத்தின் கீழ் காண்பிக்கப்பட்ட ரூபா 587,289 பெறுமதியான வைபிரேட்டிங் உருளை மற்றும் கம்பெக்டர் மற்றும் ரூபா 180,000 பெறுமதியான கொங்கிரீட் கலவை இயந்திரம என்பன பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் இயற்கை அனர்த்தங்களுக்கு உட்படும் வகையில் உஸ்ஸாப்பிட்டிய உப அலுவலக வளவில் வைக்கப்பட்டிருந்தது.

**3.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

தமக்குச் சொந்தமான வாகனமொன்று இருந்தமைக்கான உறுதிப்படுத்தும் சான்றுகளைச் சமர்ப்பிக்காத பிரதேச சபை உறுப்பினர் ஒருவருக்கு 2012 ஆகஸ்ட் மாதம் முதல் 2014 நவம்பர் வரை ரூபா 140,000 எரிபொருள் படி ஒன்று செலுத்தப்பட்டிருந்தது.

**3.5 தாமதமான செயற்திட்டம்**

---

2013 ஆம் ஆண்டின் போதும் ரூபா 100,000 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்ட வாக்கிரிகல சனசமூக மண்டபத்திற்கு தொடர்புபடுகின்ற படிக்கட்டுக்களை நிர்மாணிக்கும் வேலைகள் 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

4.1 பாதீட்டு கட்டுப்பாடு

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட பாதீட்டில் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்ட 03 வேலை விடயங்களில் கூட்டுமொத்தமாக ரூபா 24,000 நிதிஏற்பாட்டில் 100 சதவீதமும், 07 வேலை விடயங்களில் கூட்டுமொத்தமாக ரூபா 1,800,282 நிதிஏற்பாடுகளில் 55 சதவீதத்திற்கும் 95 சதவீதத்திற்குதிடையேயும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 1,824,282 தொகை உரிய செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 06 வேலை விடயங்களில் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டை விஞ்சி ரூபா 1,518,166 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(இ) 07 வருமானத் தலைப்புக்களில் மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 50 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்குதிடையே ரூபா 1,419,268 கூட்டுமொத்தமான வருமானத்தை உழைப்பதற்கு சபை தவறியிருந்தது.

(ஈ) மேற்கூறப்பட்ட விடயங்களின் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்படுகின்றது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு